Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/3001 of 1953.

விரோதிஹு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- சுபகிருது ஹு பங்குனிமீ உஉ வெள்ளிக்கிழமை 15 March. 1963. [இல-சகூ

## பேசாத நாளெல்லாம் பிறவா நாளே!

பூவுலகமே சிவலோகமாகும். எதனால்? மக்கட்பிறவியின் விசேடத்தாலும், இறைவன் ஆங்காங்கே வெளிப்பட்டு அருள் பொழிதலினாலுமென்க. இறைவன் என்றால் எங்குந் தங்கி இருப்பவர் என்று பொருள். இறை - தங்குதல்; இறுத்தல். எனவே பற்பல பிறவிகளை எடுத்து உழன்ற ஆன்மாக்களை உய்விக்க உருவத் திருமேனி கொண்ட கைம்மாறற்ற அருளுக்கு ஆன்மாக்கள மனிதப் பிறவியினால் கடமைபுரிய முடியும். மனம வாக்குக் காயம் என்ற மூன்றாலும் மக்கள் வழிபடல் வேண்டும். "வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும். தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவன்" இறைவனே! அவ்விறைவனை வாயார அடியார் போற்றி செய்து பேரின்பமெய்தினர். அவ்விறைவனைப் பற்றிப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளாகவே முடிவு செய்தனர் சிவஞானச்செல்வர்.

"கற்றானைக் கங்கைவார்
சடையான் றன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியுங்
கருதினானை
அற்றார்க்கு மலர்ந்தார்க்கு
மருள் செய்வானை
ஆருரும் புகுவானை
அறிந்தோ மன்றே
மற்றொருந் தன்னொப்பா
ரில்லாதானை
வானவர்க ளெப்பொழுதும்
வணங்கி யேத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப்
புலியூரானைப்
பேசாத நாளெல்லாம்
பிறவாநாளே"

இறைவனருளியல்

அருள் மிக்க அருமையும் பெருமையும் வாய்ந்தது அவ்வருளுக்கு நிகராவது எங்குமில்லை. திருமூலதேவர் திருவாக்கு,

சிவனருளாற் சிலர்
தேவருமாவர்
சிவனருளாற் சிலர்
தெய்வதேதொடொப்பர்
சிவனருளால் வினை
சேரகி லாமை
சிவனருள் கூடில்அச்
சிவலோக மாமே.

இறைவனுடைய ஆற்றல்

இறைவன் கருணையாகிய பராசத்தியின் துணையுடன் ஐந்தொழில்புரிவார் தொழிற்படுத்தும்போது திரோதான சத்தி என்பர். ஆன்மாக்களுக்கு மறைப்பாக நின்று இருவினையொப்பும் மலபரிபாகமும் அடையுங்கால் அருட்சத்தியாகும். ஆதிசத்தி என்று கூறப்படுவதும் அது வே அது ஆரணி, ஜெனனி, ரோத யித்திரி என்ற பாகுபாடு அடையும். ஐந்து தொழில்களையும் பரமசிவமே ஒவ்வொருவருக்கும் அளித்தவர்- பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்று அறிகின்றோம். இவர்களை அதிட்டித்து நின்று சத்தி தொழிற்படுத்தும் ஐந்தொழிலுடைவிளது அற்புதத் திருக்கூத்து.

திருமேனியில் ஐந்தொழில்கள் அடங்குமாறு:-

நடராஜப்பெருமானுடைய திருக்கர உடுக்கில் படைத்தலும், அபயகரத்தில் காத்தலும், அக்கினி ஏந்திய திருக்கரத்தில் அழித்தலும், ஊன்றிய திருவடியில் மறைத்தலும், தூக்கிய திருவடியில் அருளலும் அமைந்திருக்கும்.

தோற்றந் துடியதனில்
தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடு மங்கினிற்
சங்காரம் — ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே
யுற்றதிரோத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

தமிழ்ப்பண்டிதர், பிரம்மஸ்ரீ.
வ. மு. இரத்தினேஸ்வர ஐயர்

## நற் சிந்தனை

—:—

அழகே சனனும்
அப்பூயா சனனும்
தொழுதிட நின்றவன்
சுத்த சிவமே.

## தலைசிறந்த தமிழ்ப் புலவர்

—:—

திருக்குறள் பெருமைமிக்க நூல், தமிழரின் சிறப்பான நூல், தமிழ்நாடு மட்டுமன்றி உலகம் பூராவும் ஏற்றுக்கொள்ளும் திருக்குறள் தேவாரத் திருவாசகங்களைப் போல் மிக உயர்ந்தது என பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வர ஐயர் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் வில் நடைபெற்ற திருவள்ளுவர் நினைவு விழாவில் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் மாசித்திங்கள் உத்திர நாளில் பேராவிபற்கைப் பெருவாழ்வெய்தினார் என்பது உலகம் ஒப்புமுடிந்த உண்மை. இதனைத் தமிழகத்தில் பல்லாண்டு காலங்களாக பயிலப்பட்டு வரும் பாடல்களின்மூலம் அறியலாம் என திரு. சோ. இளமுருகனார் பேசுகையில் குறிப்பிட்டார்.

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் திருக்குறளின் சிறப்பை விளக்கி பண்டிதர் வித்துவான் க. வேந்தனார் இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் கணேசமூர்த்தி ஆகியோர் பேசினர். சமயப் பிரசார அமைச்சர் மு. மயில்வாகனம் நன்றி கூறினார்.

—

## நன்றி மறவாமை

நன்றி மறவாமை என்பது ஒருவர் எங்களுக்குச் செய்த உதவிகளை நாம ஒருபோதும் மறவாமல் இருக்கவேண்டும் என்பதாகும். ஆபத்து நேரங்களில் செய்யும் உதவிகளையன்றிச் சாதாரண நேரங்களில் செய்யும் உதவிகளையும் நாம ஒருபோதும் மறக்கக்கூடாது. ஆனால் சாதாரண நேரங்களில மற்றவர்கள் எங்களுக்குச் செய்யும உதவிகளிலும் ஆபத்து நேரங்களிற் செய்யும உதவி மிகவும் மேலானது. அவ்வுதவியை ஒவ்வொருவரும் ஒருவேளை மறுயும் இப்பிறப்பிலன்றி மறுபிறப்பிலும் மறக்காமலிருக்க வேண்டும். அப்படி மறக்காமலிருப்பதோடு நில்லாமல் நமக்கு உதவி செய்தவர்கட்கு நாமும் எப்போது உதவி செய்வோம்; எனைவிதமாகச் செய்வோம் என்ற சிந்தனையுடையோராய்க் காலத்தை எதிர்நோக்கிய வண்ணமாகவே இருக்கவேண்டும். அத்தகைய சிந்தனையுடையோராய் வாழ்வதே மனிதத் தன்மை. இப்படியான சிந்தனை யற்றவர்கள் மனிதர்களல்லர், விலங்கிற்கு ஒப்பானவர்கள் மனிதர்கள் மனிதர்களாக வாழ வேண்டுமாயின், உலகத்தில சமூகத்தில் எல்லோரும் ஒற்றுமையாகவும், இன்பமாகவும் வாழவேண்டுமாகில் அனைவரும் ஒருவருக்கொருவர் உதவிகள் செய்து வாழ்வதோடு நின்றுவிடாமல் செய்த உதவிகளை ஒருவரும் மறவாமல் இருந்து வாழவேண்டும் அச்சிறந்த பண்பாட்டை மக்கட் குலத்தை ஒற்றுமையுடன்

திரு. த. அரிபிரசாதம்,
"கீழ்கரவை"

உன்னத வாழ்வு வாழச்செய்யும். இச்சிறந்த ஒழுக்கத்தை மேலான பண்பாடடைத் தமிழர்கள் கையாள வேண்டும் இப்பண்பாடு இன்று தமிழர்களிடையே அருகிவிட்டது இதனால் இன்று தமிழினம் அல்லற்படுகிறது. பண்டைய தமிழர்களிடையில் நன்றி மறவாமை என்ற அருங்குணம் முதன்மையாக விளங்கியது என்பது பண்டைப் பெரியோர்கள் சரித்திரங்களால் அறியக்கிடக்கின்றது செய்நன்றி மறத்தல் கூடாது என்பதைத் திருவள்ளுவர் திருக்குறள் நூலில் நல்ல முறையில் விளக்கியிருக்கின்றார். அவைகளை ஒவ்வொருவரும் நல்ல முறையில் கவனமாகக் கற்க வேண்டும். தமிழர்களிடை இன்று நின்று நிலவும் பெரும் குறைகளில் நன்றி மறத்தல் என்ற இத்தீக்குணம் பெருங் குறைபாடாக இருக்கின்றது இக்குறைபாட்டை ஒவ்வொருவரும் தாமே உணர்ந்து, சிந்தித்து, தம்மைத் திருத்தி அமைக்க முற்படவேண்டும். பண்டைய தமிழினத்தைப் போல் நாமும் வாழவேண்டும் என்ற திடசிந்தை கொள்ள வேண்டும். செய்நன்றி கொன்றவர்கட்கு ஒருபோதும் உய்யும் வழி இல்லை. எங்கள் வீடுகளிலேயே அதன் உண்மையை நாம் நேரே பார்க்கிறோம். அதனாலே அனேகம தொல்லைகளும், துன்பங்களும் சம்பவிக்கின்றதையும் பார்க்கக்கூடியதாக

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிருமே.

x x x

நன்மைபெருக அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனூர் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

## நன்றே செய்க! இன்றே செய்க!

——:0:——

### சைவப் புலவர் சங்க அறிக்கை

பெறுதற்கரியது மானிடப் பிறவி. இதனைப் பெற்ற யாம் எங்கள் சின்னாள் வாழ்க்கையில் செய்யத் தக்க சமயப் பணியைத் தனித்தோ சேர்ந்தோ புரிந்து சமய வாழ்க்கையில் நிற்றல் மேலானது.

பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கி விட்டதாக மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகின்றார் என்றால் நாம் யாது செய்கின்றோம் என்று சிந்திக்க வேண்டும்.

நன்றே செய்க; நன்றும் இன்றே செய்க, இன்றும் இன்னே செய்க. நாளை நாளை என்பீராகில் அது யாருடைய நாள் என்று நம்மால் கூற முடியாது. இங்ஙனம் மனமாசற்ற ஞானிகள் கூறுகின்றார்கள். இதனை நம் வாழ்வில் சிந்தித்து இயன்றதைப் புரிதல் நன்றாகும்.

நமக்கு சமய குரவர் நால்வர். வாழ்க்கை நல்ல நெறியாக அமைகின்றது. அன்னார் சென்ற செந்நெறியில் நாவலர் ஐயா நின்று நமக்கு வழி காட்டியுள்ளார்கள். அவ்வழியில் நின்று நாமும் சமயப் பணி புரிய இறையருள் பாலித்துள்ளமையை மனமகிழ்வுடன் சைவப்பெருமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

சைவப்புலவர் சங்கம்
அங்குரார்ப்பணம்

இச் சங்கம் சமயப்பணிக்கென்றே அமைக்கப்பட்டுள்ளது. 1960ம் ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமியிலன்று ஆரம்பிக்கப்பட்டது. இன்று இரண்டரை வருடங்கள்தாம் பூர்த்தியாகிய இச்சங்கம் சமய சேவையில் மகத்தான செயல் புரிந்துள்ளதென்பதனைச் சைவப் பேருலகம் நன்கு அறியும்.

சங்கம் மேற்கொண்ட
சமயப் பணிகள்

1. தென்னிந்திய சைவ சித்தாந்த மகாசமாஜத்தாரின் சைவப் புலவர் தேர்வில் தேறிய சைவப்புலவர் 49 பேரினை அங்கத்தவராகக் கொண்டு இயங்கும் இச் சங்கம் பாடசாலைகளில் சைவ சமய பாட போதனையைச் சைவாசிரியர்கள்மூலம் பணி புரிய வேண்டியஉதவி புரிந்து வருகின்றது.

2. பிறமதப் பாடசாலைகளில் பயிலும் சைவ மாணவர்களுக்கு விடுமுறை காலங்களில் சமயபாடம் போதிக்க வேண்டிய ஒழுங்குகளைக் கையாண்டு வருகின்றது.

3. சைவாசிரியர்கள் சைவ சமய பாடம் போதிக்க வாய்ப்பளிக்கும் முகமாகச் சைவப்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சுபகிருது ஹூ பங்குனி மீ
உ௨ வெள்ளிக்கிழமை


## உத்தரத்தில் உத்தமர் விழா

உலக உத்தமர்கள் என்ற உண்மைப் பெருமைக்குரியவர்கள் அத்தனை அறிஞர்களிலும் சிறந்தவர் திருவள்ளுவர் என்பது பலவேறு மொழிகளிலும் புலமை படைத்தபெரியார்களின் கருத்து. சைவ மக்கள் அப்பேரறிஞரை நாயனார் என நாவாரப்போற்றி நயந்து புகழ்வர். ஆகவே வள்ளுவர் விழாவென்றால் உலக நிகழ்சியாகவும் சைவ நன்மக்களின் வழமையான குருபூசைத்தினங்களில் ஒன்றாகவும் விளங்குவதைக் காண்கின்றோம். மனிதன் நல்லவண்ணம் வாழ வேண்டும். அவ்வாறு வாழ்வதற்கு வழியுண்டு அந்த வழி இறைவனை நினைத்து எப்பொழுதும் இறைஞ்சுதல் என்ற உண்மைகளைத்தேவார திருவாசகம் முதலான திருமுறைகள் நினைவூட்டுகின்றன.

வேதசிவாகமங்கள் மெய்கண்ட சாத்திரங்கள், திருமுறைகள் எவ்வாறு உரிய நெறியை எடுத்துக்காட்டுகின்றனவோ அவ்வாறே தேவர்குறளும் ஒழுக்கம் என்பதை விரித்துரைத்துக் கடவுள் வணக்கத்தின் இன்றியமையாமையை முதற்கண் அறிவுறுத்தி மக்கள் வாழ்ந்துய்வதற்கு வழிகாட்டுகின்றது. இத்தகைய உத்தம நூலின் உண்மையை மக்கள் அறிந்தும் அறியாதவர்களாகவே காணப்படுகின்றனர். ஆண்டுதோறும் விழாக்கொண்டாடி வரும் மக்கள் எத்தனையோ ஆண்டுகள் கழிந்தபின்னும் அத்தனை பயன் அடைந்தவர்களாய் இருக்கின்றார்களா? விழா நடத்துவது ஒன்று, விழாவிற் கலந்து கொள்வது ஒன்று; ஆனால் விழா எந்த உண்மையை விளக்க வேண்டுமோ அந்த உண்மையை அறிந்து நாம் ஒழுகுதல் இன்னொன்று.

திருக்குறள் ஒரு திருவமுதம். திருமுறைகளைப்பாடிச் சிவபெருமானை வழிபட்டுத் திருவருளை நாடி நாள் வேலையைத் தொடங்கும் பொழுதே திருக்குறள் விளக்கும் ஒழுக்கநெறி ஒவ்வொன்றையும் நாம் அறிந்து அதற்குத்தக நிற்றலைக் கற்றுக்கொள்வதே முறையாகும்.

குறளின் பெருமையைக் கூறிவிட்டாற் போதுமா? குறளின் திறமையைப்பற்றி யாராவது மறுத்துரைப்பவர்களுண்டா? குறளைப் பற்றிப் பேசும்பொழுது குறள் நெறியைக் கைக்கொள்ளுகின்றோம் நாமெல்லோரும் என்பது பெறப்படவேண்டும். உலகஒழுக்க நூல் குறளானால் மக்கள் குறள் விதித்தனவற்றையும் விலக்கியவற்றையும் அறிந்து வாழ்தல் வேண்டும். அவ்வாறு வாழ்ந்தாற் கொலைப் பழிக் கொடுமை நீங்கும் அன்பு நெறி ஓங்கும். உலகில் அமைதி நிலவும்.

# ஆன்ம ஈடேற்றத்தை அறிவுறுத்தும் கொடியேற்றம்

சைவ சமயத்தின் தனிப் பேரியல்பினை விளக்கும் மெய்கண்ட சாத்திர நூல்கள் பதினான்கனுள் கொடிக்கவியும் ஒன்று. இந் நூலைச்சந்தானாசாரியருள் நாலாமவராகிய உமாபதிசிவாசாரியார் அருளினார்.

ஆசிரியர் வரலாறு

உமாபதி சிவாசாரியார் 14ம் நூற்றாண்டில் வசித்தவர்; கொற்றவன் குடியில் தில்லைவாழ் அந்தணர் குலத்தில் அவதரித்து, மறைஞானசம்பந்தருக்குச் சீடரானவர்; சித்திரை அத்தத்தில் முத்தி பெற்றவர். பெற்றான்சாம்பானுக்கும் முள்ளிச்செடிக்கும் முத்திகொடுத்ததுவும் சிதம்பரத்தில் ஏறாது நின்ற கொடியைக் கொடிக்கவிபாடி ஏறச் செய்ததுவும், சிதம்பர மான்மியத்துள் ஒன்றாய கோயிற் புராணத்தை இறைவனது குறிப்பறிந்து அரங்கேற்றியதுவும் இவரது திருவருட்பேற்றின் சிறப்பினை விளக்குப அற்புதங்களாம். சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் எட்டு (மெய்கண்ட சாத்திர) நூல்களும் இவரால் இயற்றப்பெற்றவை; சித்தாந்த அட்டகம் என வழங்கப்படுபவை.

நூல் வரலாறு

மறைஞானசம்பந்தர் தமக்கு மாணவனாக விரும்பிய உமாபதி சிவாசாரியரது பக்குவ நிலையைப் பரிசோதிக்க விரும்பி, நெசவாளர் சேரிக்குச்சென்று அவர்கள் வார்த்த கூழைக் கையிலேந்திக் குடித்தாராக, அவரது முழங்கை வழியே ஒழுகா நின்ற சேடத்தை உமாபதிசிவனார் உட்கொண்டார்.

உமாபதி சிவனாரின் இச்செயல் தில்லைவாழ் அந்தணர்க்கு (இவரிடம்) வெறுப்பை உண்டாக்கியது. அதனால் அவர் கோயிற் கிரியைகளில் இவரைச் சேர்த்தாரில்லை. — இழிமொழி கூறி நீக்கிவிட்டனர். உமாபதி சிவாசாரியாரின் அதிதீவிர பக்குவ நிலையைத் தில்லைவாழ் அந்தணர் முதலியோருக்கு உணர்த்த விரும்பிய இறைவன் சிதம்பரத்தில் ஒருமுறை நடைபெற்ற கொடியேற்றத் திருவிழாவின்போது கொடி ஏறாமற் செய்து "கொற்றங்குடி சிவாசாரியாரைக் கொண்டு கொடியேற்றச் செய்க" எனறருளிச் செய்தார் அங்ஙனமே தில்லைவாழ் அந்தணர் சென்று உரைக்க, அப்பணி தலைமேற்கொண்டு சிதம்பரத்துக்கு எழுந்தருளிய கொற்றங்குடி அடிகள் இக்கொடிக்கவி என்னும் பிரபந்தத்தைப் பாடி ஏறாது நின்ற கொடியை ஏற்றி விழாவை முட்டின்றி நடாத்தினாகள் என்ப.

நூற்பெயர்க் காரணம்

இந்நூல் கொடி ஏறுவதற்காகப் பாடப்பட்டது, அதனால் "கொடிக்கவி" என்னும் பெயர் நடைத்தாயிற்று. இந் நூலின் உள் இடு பொருள் - உட்கிடை ஆன்மாவின் தாழ்ந்த நிலையாகிய மலபந்த நிலையிலிருந்து மேலே உயர்த்தி என்றும் வீழாமல் நிறுத்துதலாகிய முத்திநிலையைக் குறிப்பதாதலின் அவ்வுண்மையை விளக்க எழுந்த "கவிக் கொடிக்கவி" என்றுரைப்பினும் அமையும்:-

கோயிலிலுள்ள கொடிமரம் பதியையும், அதைச்சுற்றி ஏறும் கொடிச்சீலையும் அதில் எழுதிய இடபமும் பசுவையும், அச்சீலையைப்பற்றி நீற்றும் தருப்பைக்கயிறு பாசத்தையும், கொடிச் சீலையினகத்தே இருக்கும மஞ்சள் நூல பசுவுக்கு உள்) உயிராய் நின்று தெரிவிக்கும் திரோதான சத்தியையும் குறிப்பன. கொடியேற்ற விழாவில், உயிர் பாசப்பற்றை நீக்கி அருள்வழிப்பட்டு இறைவனுடைய திருவடிப்பேற்றைப் பெறுதலாகிய ஏற்றத்தை - உயர்நிலையைப் பெறும் என்னும் உண்மை விளக்கப்படுகின்றது. கொடி - ஆன்மா, ஏற்றம் - உயர்நிலை; எனவே, கொடியேற்றம் என்பது 'ஆன்மா கீழ் நிலையாகிய பெத்த நிலையிலிருந்து மேல நிலையாகிய முத்திநிலை அடைதல் எனப் பொருள் கொள்ளக்கிடத்தலின் அங்ஙனமாதலை விளக்கவெழுந்த கவியைக் 'கொடிக்கவி' என்றார்.

கொடிக்கவி கூறுவது

கொடிக்கவி நூல் நான்கு பாடல்களால் ஆனது. முதலாம் பாடல் கட்டளைக் கலித்துறை ஏனைய மூன்றும் நேரிசை வெண்பாக்கள்' முதலாம் பாடல் மயாதீதனாகிய இறைவன், ஆன்மா, பாசம் என்னும் முப்பொருள்களின் இயல்புகளையும் உண்மையினையும் உரைக்கும். மூன்றாம் பாடல் இறைவன் மயாதீதனானவன் என்பதனை வலியுறுத்தும். இரண்டாம் பாடல் அவ்விறைவன் நாமமாகிய சூக்கும பஞ்சாக்கரப் பொருளையும், நான்காம் பாடல் தூலசூக்கும அதிசூக்கும பஞ்சாக்கரங்களை உச்சரிக்கும் முறை சிந்திக்கும் முறை அவற்றாலாம் பயன என்பவற்றையும் உணர்த்தும.

பஞ்சாக்கரப் பாசுரநூல்

நான்கு பாடல்களுள் இரண்டு பாடல்கள் பஞ்சாக்கரத்தைப்பற்றி உரைத்தலால் அப்பொருளின் மிகுதிபற்றி இந்நூலைப் 'பஞ்சாக்கரப் பாசுர நூல்' என்பாருமுளர்.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உளது. அவ்வுரையையும் அதிற் காட்டிய நுணுக்கங்களையும் அடியொற்றிச் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் சிவப்பிரகாசம் முதலிய நூல்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு எனது மயக்க அறிவுக்கு எட்டியவரையில் சற்றே விரித்து விளக்கிக் கற்று வல்லார்க்கும் புனனுமாறு இப்புத்துரை எழுதப்பட்டது. சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் தேர்வுகளுக்குத் தோற்றும் மாணவர்கள் ( ) ல் கிடைக்கப் பெறுமை காரணமாக இடர்ப்படாது முன்னேறும்பொருட்டும் ஏனைச் சைவநன்மக்கள் சைவசித்தாந்த உண்மைகளை இலகுவில் அறிந்து உய்தி பெறும்பொருட்டும் இந்நூல வெளியிடப்படுகின்றது. இப்பணியில் என்னை ஊக்கிய பெரியோர்க்கும் நண்பர்க்கும் மாணவர்க்கும், இந்நூலை மனமுவந்து அச்சிட்டுதவிய சைவபரிபாலனசபை அச்சகத்தாருக்கும் நான் என்றுங் கடப்பாடுடையேன்.

இந்நூலிற் காணப்படும் பிழைகளையும் அவற்றுக்குரிய திருத்தங்களையும் சைவச்சான்றோர் அறியத் தருவாராயின் அவைகளை நன்றியறிதலோடு உவந்தேற்று வெளியிடும் அவாவுடையேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".

இ. செல்லத்துரை
நீர்வேலி.

## மருள் செறி வாழ்வில்

*

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: ரதிபதிப்பிரியா :: தாளம்: ஆதி

பல்லவி

அருள்புரிவாய் சிவ ரூபித யாநிதி (அருள்)

அனுபல்லவி

மருள்செறி வாழ்வில் மனமலையாமல்
மானமழிந்து நிலை குலை யாமல் (அருள்)

சரணம்

சங்கரி சுந்தரி சாம்பவி காரணி,
சகல கலாவல்லி சாந்தசம் பூரணி
மங்களநாயகி வரத ராசேஸ்வரி
மலைவளர் அழகி வாமனன் சோதரி (அருள்)

## வைடூரிய விழா

—o—

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் கடந்த செயற்குழுக் கூட்டத்தில் சபையின் 75 வருட சைவத் தமிழ்ப்பணியின் நிறைவை முன்னிட்டு சித்திரையில் வைடூரியவிழா, கொண்டாட வேணடும் என்றும் இந்துசாதனம் தமிழ் ஆங்கில பதிப்புக்களின் வைடூரிய விழா மலர் இவ்வாண்டில் வெளியிடப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இவற்றை ஆராய்ந்து செயல்படுத்துவதற்கு இரண்டு உபசபைகளும் தெரிவு செய்யப்பெற்றன.

## வள்ளுவரின் வாழ்க்கைநெறி

அன்பு எங்கு இருக்கிறதோ அங்கேதான் இறைவனைக் காணலாம். அன்பு இருக்கவேண்டுமாயின் எல்லா உயிரிலும் நீ தருமியாக வாழவேண்டும், ஒன்றன் உயிரை உண்டு உன் உடம்பின் சமாதியை எழுப்பவேண்டாம் என்று வள்ளுவர் திறம்பட எடுத்துக் காட்டுகின்றார். திருக்குறள் உலக நூலாக விளங்குவதற்கு அது காட்டிய வாழ்க்கை நெறியே காரணம் என பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயகல்லூரியில்நடைபெற்ற வள்ளுவர் விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

திரு. பொன். முத்துக்குமாரன் பேசுகையில் திருக்குறளில் மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய அறம் பொருள் இன்பம் என்கின்றவை நன்கு எடுத்துக் கூறப்படுகின்றன. வள்ளுவரின் குறளிலே தமிழ்மணம் கமழ்கின்றது. இதனால் இன்றும் என்றும் நிலைத்திருக்கின்றது.

பண்டிதர் வ. நடராஜன், செல்வன் மு. தேவராசா ஆகியோரும் பேசினார்கள்.

x x x

திருக்குறள் தேவார திருவாசகங்களைப்போல் மிக உயர்ந்தது. ஒளவைப் பிராட்டியாரும்கூட, தேவர் குறளும் திருநான்மறையும், மூவர் தமிழும் முனிமொழியும் கோவை திருவாசகமும் திருமூலர் சொலலும் ஒரு வாசகமென்றுணர் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது என்று நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராசா யாழ்ப்பாணம நாவலர் பாடசாலையில் நடைபெற்ற வள்ளுவர் விழாவில் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வியாகரண சிரோன்மணி தி. கி. சீதாராமசாஸ்திரிகள் வித்துவான் நா. கணேசனார், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் பேசினார்கள்.

சமயத் தேர்வில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரிசிலும்தகுதிப்பத்திரமும வழங்கப்பெற்றன.

இவ்வாரம் 17-3-63 — 26-3-63

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

வேலை வழமையிலும் அதிகமாயிருக்கும். ஆனால் போதியளவு ஈடுசெய்யப்படுவீர். ஞாயிறு திங்கள் மாலையை எச்சரிக்கையோடு கழிக்கவும். உடல்நிலை திருப்தியாயிருக்காது.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்.

வாரமுதல்நாள் புது முயற்சிகளுக்கு ஏற்றது. திங்கள் செவ்வாய் புதன் எச்சரிக்கையோடு கழியவேண்டும். மிகுதி நாட்கள் திரும்பவு சாதகமாகும். பண இலாபங்கள் நிச்சயம்.

**மிதுனராசி** மிருகசிரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

பணமளவில் நல்லவாரம் மூற்பாதி வாரம் நன்மையானது புதன்மாலை, வியாழன் வெள்ளி எச்சரிக்கையோடு கழியவேண்டும். வார இறுதியில் நற்செய்தி கிடைக்கும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

முயற்சிகளில் பெரும் இலாபம் புகழ் சமூகவெற்றி உடல்நிலைக் குறைபாடு நண்பர்களுடன் தவறான விளக்கம் உண்டாம். வெள்ளி மாலை சனியை எச்சரிக்கையோடு கழிக்குக.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

எதிரிகளுக்கு நிச்சயமாக ஆபத்தும் உமக்கு நன்மையும் ஏற்படும் உடல்நிலைக் கோளாறும் எதிர்ப்பாலைச் சேர்ந்த நண்பர்களால் தொல்லையும் உண்டாம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2 பாதம்.

நல்லவாரம், உமது முயற்சிகளின் பலனை இலகுவில் பெறுவீர் நிலபுலங்களால் இலாபமும் சிறு உடல் நிலக் குழப்பமும் உண்டாம்.

**துலாம்**, சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

உடல்நிலை விருத்தியும் போட்டிகளில் வெற்றியும் உண்டாம் அதிக வேலையும் நிம்மதியீனமும் ஏற்படும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

சொந்த அலுவல்களில் பெரும் முன்னேற்றமும் பண இலாபங்களும் உண்டாம், உடல்நிலை திருந்தும். நண்பர்களுடன் தவறான விளக்கங்கள் தோன்றும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

சுகவீனமும் இனத்தவருடனும் பணிமனையிலும் சச்சரவுகளும் புதிய நண்பர்கள் உதவியும தொழில் வெற்றியும் ஏற்படும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1 2ம் பாதம்,

குடும்ப அலுவல்கள் குழப்பலாகவே இருக்கும். சுகவீனமும் நண்பர் இனத்தவருடன் சச்சரவுகளும் உண்டாம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

வயிற்று மார்புக் கோளாறுகளுண்டாம். பணமளவில் ஓரளவு நல்லவாரம். விவசாயத்தில இலாபம் நிச்சயம்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

பண இலாபம் நிச்சயம். தடைகளைத்தாண்டிவிடுவீர். நிலபுலங்களல் இலாபம் நிச்சயம்.

## திருவதிகை - மனவாசகங்கடந்தார்

அருளிச் செய்த

# உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

( முற்றொடர் - 10 )

**2 ஆணவம்; 3, அன்றேதான் மாருவினை.**

### ஆணவமும் கன்மமும்

ஆறுறு தத்துவமுஞ் சொன்னேமடைவாக
மாறு மலமிரண்டும் வாசொல்லக் — கூறில்
அறியாமை ஆணவம்நீ யானசுக துக்கம்
குறியா வினை என்று கோள். 22

கொ—கூ: ஆறு தத்துவமும் அடைவாகச் சொன்னேம்; (இனி) மாறு மலமிரண்டும் சொல்ல வா; (அவற்றைக்) கூறில், அறியாமை ஆணவம் (எனவும்) சுகம் துக்கம் குறியா நீ ஆன வினை எனறும் கொள்.

ப—ரை: ஆறுறு தத்துவமும் அடைவாகச் சொன்னேம் - (மும்மலங்களுள் மாயையிலிருந்து உளவாகும்) முப்பத்தாறு தத்துவங்களையும் முறையாக உரைத்தோம்; மாறு மலமிரண்டும் சொலல, வா - (இனி) விட்டு நீங்காமல் இருக்கின்ற (ஏனைய) இரண்டு மலங்களையும் சொல்லுகின்றும், வந்து கேட்பாயாக; கூறில - அம்மலங்களைக் கூறுமிடத்து, அறியாமை ஆணவம் - ஆன்மாவினிடத்து அநாதியே அறியாமையைச் செய்து நிற்பது ஆணவமலம் எனவும், சுகம் துக்கம் குறியா நீ ஆனவினை என்று கொள் - இன்பம் துன்பம் ஒன்றையும் (உன்னின் வேறாய்) நினையாமல (அவ்விரண்டும் செய்த துன்ப உருவமே) நீயாய் (அவற்றின் செயலை உன செயலாய்ப்) பொருந்தி இருப்பதுதான கன்ம மலம் எனவும் அறிந்து கொள்வாயாக.

சிவப்பிரகாசத்தில் "இருள் ஒளிர இருண்ட மோகமாய் ... ... அறிவு முழுதினையும் மறைக்கும்" (செய். 20) எனவும் திருவருட்பயனில் "பன்மொழிகள் என்னுணரும் பான்மை தெரியாத தன்மை இருளார் தந்தது". (இருணமல செய். 6) என ஆணவவியல்புரைத்தமை காண்க. கன்மம் புத்தி தத்துவம் பற்றுக்கோடாய்க் கலந்து, ஆன்மாவைத் தன்மயமாக்கி அதனைவிட்டு நீங்காததாய், மனம வாக்குக் காயங்களினுற் செய்யப்படுவதாய் இன்ப துன்பமாகிய பயனைத் தரும புண்ணிய பாவ வடிவாயமையும் எனபதை ... ..." (செய். 28) "நண்ணியிடும் உருவதனுக் கேதுவாக .... ..." என்னுஞ் சிவப்பிரகாசச் செய்யுளானறியத்தக்கது.

## நன்றே செய்க......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலவர் வகுப்புக்களை மேற்கொண்டுள்ளோம். (இவ்வாண்டு 9 பேர் தோற்றி 6 பேர் சித்திபெற்றமை குறிப்பிடத்தக்கது.)

4. தேவார புராண வகுப்புக்களை நடாத்தி வருகின்றோம்.

5. கூட்டுப் பிரார்த்தனை இயக்கங்களை அங்காங்கு இயக்கி வருகின்றோம்.

6. சமயச்சார்புள்ள சங்கங்களோடு சேர்ந்து சமய சேவைபுரிந்து வருகின்றோம்.

7. மகாசிவராத்திரி தினத்தைக் கிரமமேயில் ஆண்டாண்டு தோறும் சிறப்புற அனுட்டிக்கக்கூடிய ஒழுங்குகள செய்துள்ளோம்.

8 சமயப் பிரசாரங்களை வேண்டிய இடங்களில் மேற்கொண்டுள்ளோம்.

9. திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி மனனப் போட்டியை நடாத்துகின்றோம் (இவ்வாண்டில் 50 பாடசாலைகள் போட்டியிற் கலந்துகொண்டன)

10. சைவச் சங்கங்களின் வேண்டுகோட்கிணங்கி அச்சங்கங்கள் நடாததும் சமயப் போட்டிகளுக்கு உதவிபுரிந்து வருகின்றோம்.

11. சமய விழாக்களையும், நாயன்மார் குருபூசைகளையும் நடாத்தி மக்களிடையே சமயப்பற்றை வளர்த்து வருகின்றோம்.

12. ஆலயங்களில் நடாத்தப்படும் விசேஷ உற்சவ காலங்களில் சைவப்புலவர்களை அனுப்பிச் சமயப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

13, திருக் கோவில் களில் திருவிழாக்காலங்களில் பிரசங்கம், கதாப்பிரசங்கம், திருமுறை இன்னிசை கூட்டுப் பிரார்த்தனை முதலியவற்றை முறையே நடாத்த உதவி செய்து வீண் கேளிக்கைகளை நடாததாதிருக்க வேண்டிய ஒழுங்குகள் செய்து வருகின்றோம்.

14. வானொலி நிலையத்தில் சமயசம்பந்தமான ஒலிபரப்புக்கு வேண்டிய உதவிகள் புரிந்து வருகின்றோம்.




மேற்கோள்ளவிருக்கும் சமயப் பணிகள்

15 மாணவர்மூலம் சமய விருத்தி செய்யப் பரிசுத்திட்டம் தயாரித்துள்ளோம்.

16 சைவசித்தாந்த நூல் நிலையம் ஒன்றினை ஈழத்தில் நிறுவ முன்வந்துள்ளோம்.

17, சமய குரவர் குருபூசைத்தினங்களில் திருமுறை ஓதற் போட்டிகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளோம்.

18 அகில இலங்கையிலும் சைவ சித்தாந்த பரீட்சைகளை வெவ்வேறு பிரிவினதாக நடாத்த எண்ணியுள்ளோம்.

19 சமய விசேட படிப்பினை நடாத்த உயர்தர கலாமன்றம் அமைத்தல்.

20. திறமைமிக்கவர்களைத் தேர்ந்தெடுதது இந்தியாவிலுள்ள ஆதீனங்களில் சமயத்துறையில ஆய்வு நடாத்த உதவுதல்.

21. சித்தாந்த ஆராய்ச்சி மத்தியபீடம் ஒன்றினை ஈழத்தில் நிறுவி சமயக்கருத்துக்களை நூல்வடிவத்தில் வெளியிடல்.

இவ்வாறு 21 அம்சத் திட்டங்கள் தயாரித்துச் சமய சேவை செய்துவரும் ஒரு சங்கம் ஈழததில் இருப்பதென்றால் சைவப்பெருமக்கள் பெருமைப்படவேண்டாமா?

சைவப்பெருமக்களுக்கோர் வேண்டுகோள்

இந்த நலல கருத்துக்களைச் சைவப்பெரு மக்கள் ஒவ்வொருவரும் ஆதரிததல் வேண்டும், பெரும்பொருள் படைத்த வள்ளல்கள் வரையாது பொருளைத்தந்து ஆதரியுங்கள்; நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர், அதுவும் அற்றவர் வாய்ச்சொல் இயம்பி ஆதரவுதாரீர் என்று வேண்டுகின்றோம்,

## மாசிமகாபிஷேகம்

சிதம்பரம் மாசி 26

திருவாவடுதுறை ஆதீனம் 21-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள், சிதம்பரம் "சாகித்ய கர்த்தா" பிரம்மஸ்ரீ வி. வி. சுவர்ணவெங்கடேசதீக்ஷிதரைக்கொண்டு நேற்றுமாலை ஆதீன வித்துவான்களான திருச்சி எ. கே. சி. நடராஜன் குழுவினர் கிளாரினெட், குளிக்கரை பிச்சையப்பா குழுவினர் நாதசுரக் கச்சேரிகளுடன் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள சமேத ஸ்ரீ நடராசமூர்த்திக்கு மாசி மகாபிஷேகத்தைச் சிறந்த முறையில் நடத்தி வைத்தார்கள்.

திரு. மா, பா. "தினமணி" நிருபர்.

## போதனையை விடச் சாதனை சிறந்தது

சென்ற புதன்கிழமை (13-3-63) வித்தியாதிகாரி திருவாட்டி இரத்தினம நவரத்தினம், எம. ஏ., எம். லிற். யாழ்ப்பாண மத்தியகல்லூரி இந்து இளைஞர் மன்றத்திற் பேசுகையிற் 'போதனையை விடச் சாதனை சிறந்தது' என்றார். கூட்டத்திற்குத் தலைமை வகித்த செல்வன் பஞ்சநாதன் வித்தியாதிகாரி அம்மையாரின் தமிழறிவையும் ஆங்கில அறிவையும் குறிப்பிட்டார்.

அம்மையார் திருவள்ளுவர் கூறிய பண்புடைமையை விளக்கி, 'நாம் சிவ ஆகமங்களில் ஈடுபடாமல் இருக்கின்றோம். ஆறுமுகநாவலரின் சைவ வினவிடை தர்மபுர ஆதீனததாரின் சித்தாந்த சைவ வினவிடை முதலிய நூல்களைப் படிக்க வேண்டும். அமைதியாக இருந்து பஞ்சாட்சரத்தை ஓத வேண்டும். நீண்ட பாடல்களைப் பாட முடியாவிட்டாலும் பஞ்சாட்சரத்தை ஓதி ஐந்து நிமிடங்களாவது சிவத்தியானத்தில் ஈடுபட வேண்டும்.' என்று கூறினர். செல்வன் குலசிங்கம் நன்றியுரை கூறினர்.

—0—

பொழிப்பு: மும்மலங்களுள் (மாயையை) முப்பத்தாறு தத்துவங்களையும் முன் சொன்னேம் ஏனைய இரண்டு மலங்களாவன ஆணவம் கன்மம எனபனவாம.

### மாணவகன் கூற்று

ஆறாறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்
மாறு அருளால் வகுத்துரைத்தீர் — வேறுகா
என்னை எனக்கறியக் காட்டீர் இவைகண்டேன்
உன்னரிய தேசிகரே யுற்று 23

கொ கூ: உன்ன அரிய தேசிகரே ஆறாறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும் மாறு அருளால் வகுத்துரைத்தீர்; இவை உற்றுக்கண்டேன; (இனி இவற்றின்) வேறு ஆகா என்னை (நான்) அறிய எனக்குக் காட்டீர்.

ப—ரை: உன்ன அரிய தேசிகரே - அவக்குவிகளால் நினைத்தற்கு அரிய ஞானாசாரியரே, ஆறாறு தத்துவமும் - முப்பத்தாறு தத்துவங்களையும், ஆணவமும் - ஆணவ மலத்தையும, வல்வினையும் - வலிய கனம மலததையும், மாறு அருளால் வகுத்து உரைத்தீர் - என்றும விட்டு நீங்காத பெருங்கருணையினாலே வகைப்படுத்திச சொல்லியருளினீர், இவை உற்றுக் கண்டேன் - இந்த மும் மலங்களையும் பொருந்தி அறிந்து கொண்டேன்; வேறு ஆக என்னை அறிய எனக்குக் காட்டீர் - இனி, (இம்மலங்களைப்பற்றியதால்) இவற்றிற்கு வேறு ஆகாமல் (இவைகளேயாய) ஒன்றுபட்டு இருக்கின்ற என்னுடைய சொரூபலக்கணததை நான் அறியும்படி எனக்குக் காட்டியருளுவீராக.

இதுவரை ஆறாறு தத்துவமும் ஆணவமும் ஒன்றோடு தான் மாறு வினையும் கூறுமுகத்தால் மாணவகனுக்குப் பாசதரிசனம் காட்டிய ஆசிரியர் இனி, மேல்வரும் மூன்று செய்யுள்களால் ஆன்மதரிசனம்பண்ணுவிக்கின்றார்.

பொழிப்பு: தேசிகரே, நீர் இதுபரியந்தம் மும்மலங்களைப்பற்றிக் கூறக் கேட்டறிந்து கொண்டேன்; இனி, 'நான்' ஆகிய ஆன்மாவின் சொரூபலக்கணத்தைக் கூறியருளுவீராக.

—தொடரும்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

கொக்குவில். கொக்குவில் கிழக்கு
நாகன் வேலன் —வழக்காளி.

வழ. இல. M.B. 4754.

எதிராக
கொக்குவில் கிழக்கு
அம்பந்தோலை
சின்னவன் காத்தி —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4754-ம் இலகக வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுச் காணி 1963-ம் ஹூ மார்ச் மீ 30 உ (30-3-33) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் னின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 848. மேலும் 800 ரூபாவுக்கு 16-4-62 திகதி தொடக்கம் 19-7-62 வரைக்கும் வருடமொன்றக்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுககு 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 164-52 சதமும்.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க்கோவிற்பற்று கொக்குவில் கிழக்கிறை "மாப்பியன் தம்பசிட்டி" குளிகள் 13½ விடும் பயிர்களும் வடமேற்கேயிருக்கும் கிணற்றில் பங்கும். கிணற்றுக்கும் ரோட்டுக்கும் போக்கு வரவு செய்யும் பாதையுரித்தும். இதற்கு எல்லை கிழக்கு சடையன் செல்லனினுதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு வேலன் சின்னவனினுதனம். தெற்கு சின்னவன் வயித்தியினதும் வேலன் முருகனினதுமாதனம் இதடங்கலும்,

வி. செ. குட்டிப்பிள்ளை.
Court Commissioner,
Auctioneer & Valuer. 8-3-63.
643 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
M. 282 15-3-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக கோட்டில்

உரும்பிராய் (1ம் பேர்வழி தற்போது கொழும்பு)
1. சின்னத்தம்பி காசிநாதன்
2. சரஸ்வதி
-வழக்காளிகள்.

வழ. இல. M B 3407
எதிராக
யாழ்ப்பாணம் வண் கிழக்கு
21 பெருமாள்கோவில்
1ம் ஒழுங்கை
1. சின்னப்பு செல்லையாவும் மனைவி
2. மனோன்மணியும்
-எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3407 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணி 1963ம் ஹூ ஏப்பிரல் (சித்திரை) மீ 13 உ (13-4-63) சனிக்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 1642-50 சதம். மேலும் 1500 ரூபாவுக்கு 1-6-60 திகதி தொடக்கம் 12-1-61 திகதி வரைக்கும் வருடமொன்றுக்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும்கோட்டுச்செலவு ரூபா 182-30 சதம். இதில் கட்டிய ரூபா 500-ம். கோட்டுச் செலவில் கொடுக்கப்பட்ட ரூபா 100ம் குறைய.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை தம்பளை வடலிப்பாதியிலிருக்கும் அடைவு பிடிக்கும் ஸ்ரீமதி. நா. சிவப்பிரகாசம் ஸ்ரீமதி. வே. விநாசித்தம்பி அவர்களிடம் 1960-ம் ஆண்டு தைமாதம் 1-ம் திகதி தொடக்கம் மார்கழி 31-ம் திகதி முடியும் வரையுமுள்ள மீளாத நகைகள் யாவும் 1963-ம் ஆண்டு சித்திரை மாதம் 6-ம் தேதி (6-4-63) சனிக்கிழமை பிற்பகல் 2மணி தொடக்கம் மேற்படியார் கடையிலிருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கா. முத்துக்குமாருஐயர்,
வெந்தீஸ்மேஸ்தர் &
விலைமதிப்பாளர்-
சங்கிதிவேல்
பருத்தித்துறை, 5-3-63.
M 278 8-3-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

M.B. 4034.
புத்தூர், புத்தூர் மேற்கு
கந்தையா சதாசிவம்
—வழக்காளி.
எதிராக
புத்தூர், புத்தூர் மேற்கு
கந்தர் முருகேசு ...எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4034-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி இதன்கீழ் விபரிக்கப்படும் காணியை 1963-ம் ஆ சித்திரைமீ 11உ வியாழக்கிழமை (11-4-1963) முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 528/- மேலும் ரூபா 300-க்கு 22-5-1961 தொடக்கம் 9-3-62 வரை 12 வீத வட்டியும் கூட்டிய தொகைக்கு 9-3-1962 தொடக்கம் இறுபடும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 150/- சதம் 15

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று புத்தூர் வடக்கு இறை "ஏராந்தனைத் தோட்டம்" கில. பர. (1) ஒன்று. இதற்கு எல்லை கிழக்கு இளையவன் பொன்னனுடைய ஆதனம். வடக்கு கனகரெத்தினம் பெண் சின்னப்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு வயிரமுத்து பெண் பொன்னியின் ஆதனம். தெற்கு தவசி பெண் இலட்சுமியின் ஆதனம். இதடங்கலிற் சொரியலாய்(½) அரைவாசி

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
இல:45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 5-3-63.
M 286 15-3-63.

---

வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை 'பனன்காடு' கிலப்பரப்பு 1. குளிகள் 1½, புதியகல்வீடும் செய்பயிர் வான்பயிர்களும் தெற்கெல்லைககாணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும். மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லை கிழக்கு வயித்திலிங்கம் தம்புவினுதனம். வடக்கு கை ஒழுங்கை. மேற்கு நாகலிங்கம் செல்வத்துரையினுதனம் தெற்கு அப்பா செல்லத்துரை தம்பையாவினுதனம். இது முழுவதும். பதிவு D 270/109.

வி, செ. குட்டிப்பிள்ளை,
கொம்மிஷனர்.
643 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம் 21-2-63.
M. 283 15-3-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
கோண்டாவில் சின்னப்பு
பொன்னுத்துரை
வழக்காளி.
இல M B 4351
எதிராக
மானிப்பாய் சுவாமிநாதபிள்ளை நவரெத்தினம் தனககாகவும் தனது காலஞ்சென்ற மனைவி இராசபதி அல்லது இராசபூபதியின் ஆதனங்களின் கோட்டுப் பிரதிநிதியாகவும்.
-எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M B 4351ம் இலகக வழககில் எனககுக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னல் விபரிககப்படும் ஒரு துண்டுக காணி 1963 ஹூ சித்திரை மீ 9-ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைததொகை:-முதல்வட்டி ரூபா 3280-00ம் ரூபா 2500 க்கு 25-10-61 தொடக்கம் 10-5-62 வரை 8 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 6 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 224-00,

காணி விபரம்,

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை "மண்டிலவதரை" உத்தரவு பெற்ற உலாந்தா ஜே. டி. வீரசிங்கத்தால் 931-A இலககத்தில் தயாரிககப்பட்டுப் பாட்டிசன் வழககில் அணைககப்பட்டிருக்கும் அளவு படத்தில் பிரகாரம் மூன்றும் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது பர. நீ. இல நாலு குளி ஒன்பது (பர. நீ. இல, 4 குளி 9) பயிர்வகைகளும் 'D' என அடையாளமிடப்பட்ட வீடும் 'E' என அடையாளமிடப்பட்ட அடுககளையும் 'R' என அடையாளமிடப்பட்ட கிணற்றில் அரைப்பாகமும். இந்தப் பர. நீ. இல 4 குளி 9 – க்கும் எல்லை கிழககு விசுவலிங்கம் பெண் தங்கச்சியம் மாவிற்குரிய வாதனமும் சொல்லப்பட்ட அளவு படத்தில் 4-ம் துண்டாகக் காட்டப்பட்டிருக்கும் ஆதனமும். வடககு சொல்லப்பட்ட அளவு படததில் 4-ம் துண்டாகக் காட்டப்பட்டிருக்கும் காணியும், ஒழுங்கையும். மேற்கும் தெற்கும் சொல்லப்பட்ட அளவு படத்தில் முதலாம் துண்டாகக் காட்டப்பட்டிருக்கும் ஆதனம். இதன் பதிவு G 329/168

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
1963ம் ஹூ பக்குனிமீ 5-ம் திகதி,
காரைநகர்,
M. 284 15-3-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

இலக்கம்: M.B. 3290.
சண்முகம் தம்பையா
—புங்குடுதீவு மேற்கு
தற்பொழுது - மானிப்பாய்.
—வழககாளி.
எதிராக:
1. பொன்னம்பலம் செல்வத்துரையும்
2. மனைவி சின்னத்தங்கமும்
—புங்குடுதீவு மேற்கு
— எதிரிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டில் இல. M.B. 3290-ம் இலகக வழக்கில எனக்குக் கிடைதத கோட்டுககட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணிகள் 1963-ம் ஆண்டு சித்திரைமாதம் 13-ம் திகதி சனிககிழமை காலை 10½ மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 922-ம். 9-8-60 தொடக்கம் 12-10-60 வரையில் ரூபா 500-க்குப் பதினெட்டு (18) வீத வட்டியும் அதன் பின் பணம் முற்றுக இறுபடும் வரையில் முழுத் தீர்வைத் தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 195.88ம் இதில் ரூபா 600-ம் செலவால் ரூபா 75-ம் கொடுககப்பட்டது.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக தீவுப்பகுதி புங்குடுதீவு கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை (1) தலைகாட்டி கில பரப்பு 6½. ஆறரைக்கு எல்லை கிழக்கு பரநிருபசிங்கம் பெண் ரத்தினபூபதிககும பங்காளருககு முரியவாதனம். வடக்கு சண்முகநாதன் பெண் சிவககொழுந்துவுக்கும் குமாரவேல்பிள்ளை கைம்பெண் வேலாசிப்பிள்ளைக்குமுரிய வாதனங்கள். மேற்கு காதநிசேசு பெண் அமிர்தகௌரிக்கும் தம்பிப்பிள்ளை பெண் நாகம்மாவுக்கு முரியவாதனங்கள். தெற்கு மாணிக்கம் முருகேசுவுக்கும் பங்காளருக்கு முரியவாதனம். இதடங்கலும்.

(2) ஷெ இறை தலைகாட்டி கிழக்குப்புறமாக கில பரப்பு 2 குளி 7. இரண்டு குளி ஏழுக்கு எல்லை கிழக்கு தில்லையம்பலம் பெண் செல்லம்மாவுக்குரிய ஆதனம் வடக்கு கந்தையா பெண் முத்துப்பிள்ளைக்குரிய வாதனம் மேற்கு தில்லையம்பலம் சதாசிவத்துககும் பெண தருமலட்சுமிககு முரியவாதனம். தெற்கு தெரு இதடங்கலும்,

க செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"முருகன் இலலம்"
இணுவல், 1-3-63.
M. 287 15-3-63.

## யாழ்ப்பாணம் —ஐக்கிய இலாபநிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம் 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றதக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாய் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்.

Std. 14.

## ஸ்ரீ. கற்பகவிநாயகர் ஆலயம் (சாந்தையர் மடம்)

15-3-63 வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு, கூட்டுப் பிரார்த்தனைச் சபைச்சார்பில், வண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தான வித்துவான் உயர்திரு. க. ஆறுமுகம் ஆசிரியர் "வள்ளுவரும் திருக்குறளும்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

## அடைவு நகை விற்பனவு

வண்ணார்பண்ணை மேற்கு வைரவர் கோவல் வீதியிலுள்ள 10-ம் இலக்க வீட்டிலிருந்து அடைவு பிடிக்கும் சி முத்துக்குமாருவாகிய என்னிடம் 1958-ம் ஆண்டிலும் 1959 - ம் ஆண்டிலும் அடைவு வைக்கப்பட்டு இதுவரை மீளப்படாமல் இருக்கும் நகைகள் யாவும் 23-3-63 சனிக்கிழமை காலை பத்து மணிக்கு விலைமதிப்பாளர் திரு. பசுபதி அவர்களால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

இப்படிக்கு,
சி. முத்துக்குமாரு,
M 285 15-3-63

## நன்றி மறவாமை

1-ம் பக்கத் தொடர்ச்சி

இருக்கின்றது. இத்தகைய குறைபாடுகளைத் தமிழர்கள் போக்க முன்வந்து உழைக்கின்றார்களில்லை. பெரியவர்களிடையேயும் அறிவாளிகளிடையேயும் இக்குறைபாடுகளை நீக்கினலேதான் வருங்கால நம் இளைஞர்களும் அவர்களைப் பின்பற்றி வாழ்வை வளமாக்க முடியும். இல்லாவிடில் வருங்கால இளைஞர் உலகமும் கீழ் நிலைமையைத்தான் அடைய வேண்டிவரும். ஆகவே நன்றி மறவாமை என்ற பெருங் குணத்தை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும்.

## சிவசிந்தனை

அநந்தகல்யாண குணங்களுடைய அப்பனைத் தேடி வனங்களுக்கும் மலைக்குகைகளுக்கும் செல்லவோ? எமது அகங்களுக்கெல்லாம் அகமாக, உயிர்களுக்கெல்லாம் உயிராக உலகமெங்கணும் நிரம்பியிருப்பவனைத் தேடவறியார் தெருத் தெருவாய்த் தேசந் தேசமாய்த் திரிந்து வருந்துவர். பார்த்த விடமெங்கும், பார்க்கும் பொருளெல்லாம், அந்த அப்பன் அம்சமே நிறைந்துள்ளது. அவனியக்கமே அவனியின் தோற்றவொடுக்கங்கள். ஆகவே எங்கும் அவனக, எல்லாம் அவனக, என்றும் அவனக, விளங்கும் இவ்வண்டத்தைப் போல அருமையான இடம் வேறு ஏது? பண்டத்திலும் பதவியிலும் பாயும் ஆசை விட விட அண்டநாயகன் இருதய குகையில் தாண்டவமாடுவதை அன்பர்கள் அநுபூதி வாயிலாக அறிந்து உரைத்தனர். ஆகவே ஆசையறுமின்! ஆசையறுமின!! திருவடிக்குத் தினமும் பூசை புரிமின்! பூசை புரிமின்!!

ஒரு பொல்லாப்புமில்லை

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை. 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 15 3-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்.